சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.16.04.2026.
SC.No.204/2019
PW2 : ( Lw1 ) செல்வகுமார் (வயது 50 ) த/பெ.பழனிசாமி
(2 முதல் 4 மற்றும் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டம் துவாக்குடி போக்குவரத்து காவல் ஒழுங்கு பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2017 ஆம் தேதி திருவரம்பூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் முதல் நிலை காவலர் எண்.153 பணியில் இருந்தபோது, காலை சுமார் 7.00 மணியளவில் உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவருடன் நானும் முதல் நிலை காவலர் 1015 முத்துகிருஷ்ணன், முதல் நிலை காவலர் 425 சுதாகர் மற்றும் CIU தலைமை காவலர் திருகுமார் ஆகியோருடன் எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் ரைடு புறப்பட்டு டோல்கேட் சமயபுரம் சென்று கண்காணித்தும் பின்னிட்டு, கொணலை சென்று கண்காணிக்கையில் NSR ஹோட்டல் அருகில் டிஎன் 27 யு1113 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் லாரியிலிருந்து டிஎன் 48 S 1764 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி வேனில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட, வெளிமாநில மதுபானத்தை 5 நபர்கள் ஏற்றிக்கொண்டிருக்கும்போது, போலிஸ் பார்டியுடன் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்கும்போது, 2 நபர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். பிடிபட்டவர்களாகிய அண்ணாதுரை, தர்மலிங்கம் ஆகிய இருவரும் மண்ணச்சநல்லூர் ராசாம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்ததாகவும், மணிகண்டன் பாண்டிச்சேரி காட்டேரி குப்பத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்ததாகவும், தப்பி ஓடியவர்கள் பற்றி விசாரிக்க ஈச்சர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் சிவகுமார் என்பவர் பாண்டிச்சேரி மேட்டுபாளையத்தில் உள்ள சாணாரபேட்டையை சேர்ந்தவர் என்றும் தெரியவந்ததாகவும், ஈச்சர் லாரியை சோதனை செய்தபோது ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 750ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட அட்டைபெட்டியில் 400 அட்டை பெட்டிகளும், BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட அதே அளவுக்கொண்ட 10 அட்டைபெட்டிகளும் டிஎன் 48 S 1764 என்ற எண் கொண்ட ஆம்னி வேனில் BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட 50 அட்டை பெட்டிகளும் இருந்தது. மேலும், மேற்படி அட்டை பெட்டிகளில் உள்ள பாட்டில்களின் சீல்கள் உடைக்கப்பட்ட

நிலையில் வைத்திருந்தார்கள். மேற்படி பாட்டில்களின் மூடியை திறந்து நுகர்ந்து பார்க்க கெட்ட நெடியுடன் கூடிய வாடை வீசியதால், இதனை அருந்தினால் மனித உயிருக்கு தீங்கு ஏற்படும் என கருதி எதிரிகளை உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்கள் பிடித்து வைத்திருப்பதாக காவல் ஆய்வாளருக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். காவல் ஆய்வாளர் அவர்கள் காலை 8.30 மணியளவில் சம்பவ இடம் வந்த எதிரிகள் மணிகண்டன், அண்ணாதுரை, தர்மலிங்கம் ஆகியோரை காலை 9.00 மணிக்கு கைது செய்து விசாரணை மேற்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் முதல்நிலை காவலர் 1015 முத்துகிருஷ்ணன் ஆகியோர் கையொப்பம் செய்தும், டிஎன் 27 யு 1113 என்ற எண் கொண்ட ஈச்சர் வாகனத்தையும் டிஎன் 48 S 1764 என்ற ஆம்னி வேனையும் மகஜரில் கைப்பற்றியும், கைப்பற்றுதல் மகஜரில் நானும் முதல்நிலை காவலர் 1015 முத்துகிருஷ்ணன் ஆகியோர் கையொப்பம் செய்தோம். வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்களான ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 400 அட்டைப்பெட்டிகளையும், BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட அதே அளவு கொண்ட 60 அட்டை பெட்டிகளையும் கைப்பற்றி, சாட்சியாக இருக்க பொதுமக்கள் யாரும் முன் வராததால், மகஜரில் சாட்சிகளாக நானும் முதல்நிலை காவலர் முத்துகிருஷ்ணனும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படுவது எதிரி மணிகண்டனின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகும் அதில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அண்ணாதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தர்மலிங்கம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மணிகண்டன், அண்ணாதுரை, தர்மலிங்கம் ஆகியோரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முதலிலிருந்து 2 வது இடத்தில் நிற்பவர் அண்ணாதுரை ஆவார், முதலிலிருந்து 3 வதாக நிற்பவர் எதிரி மணிகண்டன் ஆவார். முதலிலிருந்து 4 வதாக நிற்பவர் எதிரி தர்மலிங்கம் ஆவார். ஈச்சர் லாரி மற்றும் அதிலிருந்த 400 மது அட்டைகள் மற்றும் BLACK GRAPES என்ற லேபிள் ஒட்டப்பட்ட 10 மது அட்டைகள் ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது

தான். அது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. டிஎன் 48 S 1764 என்ற எண் கொண்ட ஆம்னி வேனை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றியதில் அந்த மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடைது தான். அது **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. BLACK GRAPES பிராந்தி 750 ML அளவு கொண்ட 50 அட்டை பெட்டிகள் ஒவ்வொன்றிலும் 12 பாட்டில்கள் கொண்ட 600 பாட்டில்கள் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சியாக இட்ட முதல் கையொப்பம் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஆம்னி வேன் தான் வழக்கில் கூறியது என்றால் சரிதான். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மது பாட்டில்கள் BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட பெட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட மொத்த பாட்டில்கள் 720 அதன் புகைப்பட நகல் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான்.அந்த புகைப்படம் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஈச்சர் வாகனத்திலிருந்து ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 400 அட்டை பெட்டிகளிலிருந்து எடுக்கப்பட்ட 4800 மது பாட்டில்களின் புகைப்பட நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்திற்கு பிறகு இன்று தான் நான் எதிரிகளை பார்க்கிறேன் என்றால் சரிதான். எனக்கு தெரிர்நத வரை எதிரிகள் மீது வேறு எந்த குற்ற வழக்குகளும் இல்லை என்றால் சரிதான். எதிரிளை அடையாளம் காட்டுவதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றும் அவ்வாறு நடத்தி நான் எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

ரோந்துக்கு செல்லும்போது, எத்தனை மணிக்கு எந்த வாகனத்தில் நான் சென்றேன் என்றால், காலை 7.00 மணிக்கு திருச்சி, சுப்பிரமணியபுரத்திலிருந்து, தனிதனியாக அவரவர் இருசக்கர வாகனத்தில் கிளம்பினோம். தனிதனியாக சென்றதாக சொல்லியுள்ளேன் என்பதால், அனைவரும் ஒன்று சேர்ந்த இடம் எது என்றால் கொணலை, NSR ஹோட்டல் அருகில் ஆகும்.

முதல் விசாரணையில் சம்பவ இடத்திற்கு சென்றபோது, எதிரிகளை பிடித்து வைத்திருந்த விவரம் தெரிந்தது என்று கூறியுள்ளேன் என்பதால் ஏற்கனவே உதவி ஆய்வாளர் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. காலை 7 மணிக்கு கிளம்பியதிலிருந்து மற்ற இடத்திற்கு சென்று விட்டு கொணலைக்கு நான் சொன்ன இடத்திற்கு செல்வதற்கு எத்தனை மணி ஆகியிருக்கும் என்றால் காலை சுமார் 7.40 இருக்கும்.

எனக்கு பாக்கெட் டைரி பராமரிக்கும் பழக்கம் உண்டு. அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் விசாரணையின்போது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த பாக்கெட் டைரியையும், GD கோப்பையும் பார்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அ.சா.ஆ.5 முதல் 7 ஆவணங்களில் கொடுத்ததாக கூறும் ஒப்புதல் வாக்குமூலம் எந்த இடத்தில் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் ஆய்வாளர் மடிகணிணியில் தட்டச்சு செய்தார். காவல் நிலையத்தில் பிரிண்ட் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அதேபோல் கைப்பற்றுதல் மகஜரிலும் குற்ற எண் மற்றும் சட்டபிரிவுகள் பதிவாகியுள்ளது என்றால் சரிதான்., NSR உணவகம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கு சிசிடிவி பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பார்வை மகஜரில் தனி நபர் மட்டுமே சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரில் தனி நபர் கையெழுத்து செய்துள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலத்தில் பொதுமக்கள் கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று கூறுவது பொய்யாக மற்றும் வழக்கிற்காக கூறுகிறோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை மற்றும் எதிரிகளை கைது செய்யவில்லை மற்றும் எதிரிகள் எந்த ஒரு ஒப்புதல் வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றும் கூறினால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/signed/
செல்வகுமார்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA

Digitally signed by R.MOHANA
Date: 2026.04.16 19:13:19 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி

சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.16.04.2026.
SC.No.204/2019
PW3 : ( Lw4 ) சுதாகர் (வயது 46 ) த/பெ.குணசேகரன்
(2 முதல் 4 மற்றும் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருவரம்பூர், போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.09.2017 ஆம் தேதி நான் துறையூர், மதுவிலக்கு அமலாக்க பிரிவில் நான் முதல்நிலை காவலராக இருந்தபோது, துறையூர் காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில், காலை சுமார் 7.00 மணியளவில் உதவி ஆய்வாளர் செல்வராஜ் என்பவருடன் நானும் முதல் நிலை காவலர் 1015 முத்துகிருஷ்ணன், 153 செல்வகுமார் மற்றும் CIU தலைமை காவலர் திருகுமார் ஆகியோருடன் எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் ரைடு புறப்பட்டு டோல்கேட் சமயபுரம் சென்று கண்காணித்தும் பின்னிட்டு, கொணலை சென்று கண்காணிக்கையில் NSR ஹோட்டல் அருகில் டிஎன் 27 யு1113 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் லாரியிலிருந்து டிஎன் 48 S 1764 என்ற பதிவெண் கொண்ட ஆம்னி வேனில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட, வெளிமாநில மதுபானத்தை 5 நபர்கள் ஏற்றிக்கொண்டிருக்கும்போது, போலிஸ் பார்டியுடன் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்கும்போது, 2 நபர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். பிடிபட்டவர்களாகிய அண்ணாதுரை, தர்மலிங்கம் ஆகிய இருவரும் மண்ணச்சநல்லூர் ராசாம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்ததாகவும், மணிகண்டன் பாண்டிச்சேரி காட்டேரி குப்பத்தை சேர்ந்தவர் என்றும் தெரியவந்ததாகவும், தப்பி ஓடியவர்கள் பற்றி விசாரிக்க ஈச்சர் லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் சிவகுமார் என்பவர் பாண்டிச்சேரி மேட்டுபாளையத்தில் உள்ள சாணாரபேட்டையை சேர்ந்தவர் என்றும் தெரியவந்ததாகவும், ஈச்சர் லாரியை சோதனை செய்தபோது ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 750ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட அட்டைபெட்டியில் 400 அட்டை பெட்டிகளும், BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட அதே அளவுக்கொண்ட 10 அட்டைபெட்டிகளும் டிஎன் 48 S 1764 என்ற எண் கொண்ட ஆம்னி வேனில் BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட 50 அட்டை பெட்டிகளும் இருந்தது. மேலும், மேற்படி

அட்டை பெட்டிகளில் உள்ள பாட்டில்களின் சீல்கள் உடைக்கப்பட்ட நிலையில் வைத்திருந்தார்கள். மேற்படி பாட்டில்களின் மூடியை திறந்து நுகர்ந்து பார்க்க கெட்ட நெடியுடன் கூடிய வாடை வீசியதால், இதனை அருந்தினால் மனித உயிருக்கு தீங்கு ஏற்படும் என கருதி எதிரிகளை உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்கள் பிடித்து வைத்திருப்பதாக காவல் ஆய்வாளருக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். காவல் ஆய்வாளர் அவர்கள் காலை 8.30 மணியளவில் சம்பவ இடம் வந்த எதிரிகள் மணிகண்டன், அண்ணாதுரை, தர்மலிங்கம் ஆகியோரை காலை 9.00 மணிக்கு கைது செய்து விசாரணை மேற்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். டிஎன் 27 யு 1113 என்ற எண் கொண்ட ஈச்சர் வாகனத்தையும் டிஎன் 48 S 1764 என்ற ஆம்னி வேனையும் மகஜரில் கைப்பற்றினார்கள். வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்களான ACE AAA என்ற லேபிள் ஒட்டப்பட்ட 400 அட்டைப்பெட்டிகளையும், BLACK GRAPES என்று லேபிள் ஒட்டப்பட்ட அதே அளவு கொண்ட 60 அட்டை பெட்டிகளையும் கைப்பற்றினார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்வதற்கும், எதிரிகளை கைது செய்வதற்கும், ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் தினத்திற்கு பிறகு இன்று தான் நான் எதிரிகளை பார்க்கிறேன் என்றால் சரியல்ல, இதே வழக்கில் மாவட்ட நீதிமன்றத்தில் அவர்களை பார்த்தேன். எனக்கு தெரிர்நத வரை எதிரிகள் மீது வேறு எந்த குற்ற வழக்குகளும் இல்லை என்றால் சரிதான். எதிரிளை அடையாளம் காட்டுவதற்கு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை என்றும் அவ்வாறு நடத்தி நான் எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான்.

ரோந்துக்கு செல்லும்போது, எத்தனை மணிக்கு எந்த வாகனத்தில் நான் சென்றேன் என்றால், காலை 7.00 மணிக்கு திருச்சி, சுப்பிரமணியபுரத்திலிருந்து, தனிதனியாக அவரவர் இருசக்கர வாகனத்தில் கிளம்பினோம். தனிதனியாக சென்றதாக சொல்லியுள்ளேன் என்பதால், அனைவரும் ஒன்று சேர்ந்த இடம் எது என்றால் கொணலை, NSR ஹோட்டல் அருகில் ஆகும்.

முதல் விசாரணையில் சம்பவ இடத்திற்கு சென்றபோது, எதிரிகளை பிடித்து வைத்திருந்த விவரம் தெரிந்தது என்று கூறியுள்ளேன் என்பதால் ஏற்கனவே உதவி ஆய்வாளர் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. காலை 7 மணிக்கு கிளம்பியதிலிருந்து மற்ற இடத்திற்கு சென்று விட்டு கொணலைக்கு நான் சொன்ன இடத்திற்கு செல்வதற்கு எத்தனை மணி ஆகியிருக்கும் என்றால் காலை சுமார் 7.35 இருக்கும்.

எனக்கு பாக்கெட் டைரி பராமரிக்கும் பழக்கம் உண்டு. அந்த பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் விசாரணையின்போது தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த பாக்கெட் டைரியையும், GD கோப்பையும் பார்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் மற்றும் சட்டபிரிவுகள் பதிவாகியுள்ளது என்றால் சரிதான்., NSR உணவகம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் அந்த நேரத்தில் அந்த இடத்தில் மக்கள் நடமாட்டம் இல்லை. அங்கு சிசிடிவி பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பார்வை மகஜரில் தனி நபர் மட்டுமே சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். பார்வை மகஜரில் தனி நபர் கையெழுத்து செய்துள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூலத்தில் பொதுமக்கள் கையொப்பம் செய்ய முன்வரவில்லை என்று கூறுவது பொய்யாக மற்றும் வழக்கிற்காக கூறுகிறோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை மற்றும் எதிரிகளை கைது செய்யவில்லை மற்றும் எதிரிகள் எந்த ஒரு ஒப்புதல் வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றும் கூறினால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

<u>**ம.வி**</u> - இல்லை.

/signed/
சுதாகர்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.04.16 19:13:27 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி